Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | திரு.டாக்டர் நவரத்தினராஜன் | வட்டம் | - | சென்னை |
| த/பெ | - | திரு.அன்புராஜன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஸ்டேன்லி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சென்னை | வயது | - | 34/2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 19-08-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர் | அரசுக்காக – S.P.ராமச்சந்திரன் LLM.APP Gr-1 |
| | எதிரிக்காக வழக்கறிஞர் ஆர்.ஆர்.பெருமாள், B.A.,B.L., |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | City Civil Court, Chennai. |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு.S.பரணி Computer Operator |
| சாட்சி ( Witness) | திரு.நவரத்தினராஜன் (அ.சா.9) |

City Civil Court, Chennai. நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>19-08-2025</u>**
**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சென்னை ஸ்டேன்லி அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04-04-2021-ம் தேதி வால்பாறை அரசு மருத்துவமனையில் உதவி

மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது சுமார் அதிகாலை 12.10 மணிக்கு வால்பாறை மாணிக்கா என்.சி. எஸ்டேட்டை சேர்ந்த கோகிலா, க/பெ.சக்திவேல் வயது 36/2021, என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். நான் அவரை விசாரித்தபோது தன்னை இனம் தெரிந்த மூன்று நபர்கள் 03-04-2021-ம் தேதி சுமார் இரவு 10.30 மணியளவில் மாணிக்கா என்.சியில் உள்ள தனது வீட்டு முன்பு வைத்து கல்லாலும், கட்டையாலும் அடித்ததாகவும் கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது கோகிலா என்பவருக்கு தலையில் பின்பக்கம் ஒரு வெட்டுக்காயமும், சிறு ரத்தக்கட்டும், இரண்டு கால்தொடை மற்றும் இடது கை கட்டை விரலில் வீக்க காயம் இருந்தது. மேற்படி காயத்திற்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து அனுப்பிவைத்த சிகிச்சை விவரப்பட்டியல் பார்வையிட்டதில் கோகிலாவிற்கு தலையில் பின்பக்கம் இரண்டு கால் தொடை மற்றும் இடது கை கட்டைவிரலில் ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆககவும், காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** வால்பாறை காவல் உதவி ஆய்வாளர் இது தொடர்பாக என்னை விசாரித்தார்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்து பதிவேடு, காயச்சான்று இரண்டிலும் ஒரு நபர் தாக்கியதாக உள்ளது என்றால் சரிதான். மருத்துவ பதிவேடுகளின் படி தாக்கியதாக ஒரு நபர் என்று உள்ளது என்றால் சரிதான். கோகிலாவின் பின்னந்தலையில் இருந்த காயம் ஒரே நேர்கோட்டில் இருந்த வெட்டுக்காயம் என்றால் சரிதான். இந்த காயம் கூர்மையான ஆயுதத்தால் மட்டுமே ஏற்படும் என்றால் ஏற்பட வாய்ப்பு அதிகம். கல்லால் தாக்கும் போது மேற்படி காயம் வரவாய்ப்பு இல்லை என்றால் கல் கூர்மையாக இருக்கும் போது மேற்படி காயம் வர வாய்ப்புள்ளது. கால் தொடையை பின்பக்கம், முன்பக்கம், மேல்பக்கம், கீழ்பக்கம் என நான்கு பிரிவாக பிரிக்கலாம் என்றால் சரிதான். தொடையிலிருந்த காயம் மேற்படி எந்த பக்கத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு விபத்து பதிவேடு காயச்சான்று ஆகியவற்றில் இல்லை என்றால் சரிதான். பொள்ளாச்சி மருத்துவமனையிலிருந்து வந்ததாக உள்ள சிகிச்சை விவரப் பட்டியலில் Reference No. காயச்சான்றில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயச்சான்றில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த சிகிச்சைக்குறிய விவரப் பட்டியலை பார்வையிட்டு காயச்சான்று வழங்கியதாக காயச்சான்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சிடிஸ்கேன், எக்ஸ்ரே, ஆர்த்தோ Opinion பார்வையிட்டு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேன். நான் வால்பாறையில் வேலை பார்த்தால் வால்பாறை நிலப்பகுதி எப்படி இருக்கும் என்று எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எஸ்டேட் பகுதிகளில் அதிகமாக கருங்கல்லாலான படிக்கட்டுகள் தான் இருக்கும் என்றால் சரிதான். ஒரு நபர் வேகமாக ஓடி அந்த படிக்கட்டுகளில் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.